இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

உண்ணாட்டரசிறை (திருத்தம்)

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2013, மாச்சு மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[***221 ஆம் சட்டமூலம்***]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 31.00 ***தபாற் செலவு : ரூபா 10.00***

சட்டப்பயன் பற்றிய கூற்று

வாசகம் 2: இவ்வாசகமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 7ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன்பாடானது இவ்வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களை வருமான வரியிலிருந்து விலக்களிப்பதாக இருக்கும்.

வாசகம் 3: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இவ்வாசகத்தில் சில சூழ்நிலைகளில் முதலீட்டுச் சபை பொறுப்பு முயற்சியில் சேவைபுரியும் வெளிநாட்டு நிபுணர்களுக்கு வரி விலக்களிப்பு வழங்கப்படும்.

வாசகம் 4: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது விலை கூறப்பட்ட கூட்டிணைப்பு தனிசு பிணைப் பொறுப்பு மற்றும் மாநகரமுறி என்பவற்றிலிருந்தும் இலங்கையில் வழங்கப்பட்ட பிணையப் பொறுப்பு அல்லது முறி என்பவற்றின் முதலீட்டின் வட்டிக்கான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

வாசகம் 5: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவின் கீழ் -

(அ) ஒரு நாட்டிலிருந்து பண்டங்களை கொள்வனவு செய்து இலங்கை தவிர்ந்த வேறொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில்ஈட்டுகைகளுக்கு;

(ஆ) இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வருமானத்திற்கு;

(இ) விலைகூறப்பட்ட கூட்டிணைப்பு தரிசு பிணைப்பொறுப்பு மற்றும் மாநகரமுறி என்பவற்றி லான முதலீட்டிலிருந்து இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு; அத்துடன்

(ஈ) சில சூழ்நிலைகளில் முதலீட்டுச் சபை கம்பனியொன்றின் வெளிநாட்டு ஒத்துழைப்பாளர் ஒருவரினால் பெறப்பட்ட அரசுரிமைக்கு, வாக்குரிமைக் கட்டணத்திற்கு அல்லது கொடுப்பனவிற்கு,

விலக்களிப்பு வழங்கப்படும்.

வாசகம் 6: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இலங்கையில் நிரந்தர வதிவினை கொண்டுள்ள தனியாட்களுக்கும் வரிவிலக்களிப்பு வழங்கப்படும்.

வாசகம் 7 மற்றும் வாசகம் 8 : இவ்வாசகங்களானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ மற்றும் 16ஈ பிரிவுகளைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது அப்பிரிவுகளில சில திருத்தங்களைச் செய்யும்.

வாசகம் 9: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 16உ என்னும் புதிய பிரிவொன்றினை உட்புகுத்துவதுடன் அப்புதிய பிரிவானது புதுப்பிக்கக்கூடிய சக்தி பயிர்ச்செய்கை மற்றும் சேதனப் பசளை அத்துடன் பீடைக் கொல்லிகள் தயாரிப்பு என்பவற்றிலிருந்து வருமானவரியிலிருந்து விலக்களிப்புக்கு ஏற்பாடு செய்கின்றது.

வாசகம் 10 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அப்பிரிவில் புடைவை உட்சேர்க்கப்படுவதுடன் இது தொடர்பான ஏனைய பிரிவுகளுடன் இயைந்த வகையில் திருத்தத்தினை மேற்கொள்ளும்.

வாசகம் 11: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது தொழில்நுட்ப தரமுயர்த்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சக்தி வினைத்திறன் நோக்கங்கள் என்பவற்றிற்கான பொறித்தொகுதிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் செலவினம் மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட விசேட அறவீடு என்பவற்றினை குறைப்பதற்கு அனுமதிக்கும்.

வாசகம் 12 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது விளையாட்டுத்துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிகழ்வுகள் தொடர்பில் விளம்பர செலவினங்களை கழிப்பனவு செய்வது மீதான வரையறைகளை நீக்குவதாக அமையும்.

வாசகம் 13 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஒரு லட்சம் வரை ஊழியத்திலிருந்தான வருமானம் தகைமை பெறும் கொடுப்பனவாக தனியாட்களை அனுமதிப்பதாக அமையும்.

வாசகம் 14 மற்றும் வாசகம் 15 : இவ்வாசகங்களானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ மற்றும் 40ஆ பிரிவுகளைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவுகளின் சட்டப்பயனானது அப்பிரிவுகளின் கீழ் வரி வீதங்களை பதினாறு சதவீதமாக குறைப்பதாக அமையும்.

வாசகம் 16 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 46அ என்னும் புதிய பிரிவொன்றினை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவானது கோழிப் பண்ணையிலிருந்ததான வருமானம் தொடர்பில் சலுகை வரிவிதத்தினை ஏற்பாடு செய்யும்.

வாசகம் 17 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 48இ என்னும் புதிய பிரிவொன்றினை உட்புகுத்துவதுடன் புதிய பிரிவானது முதலீட்டுச் சபையின் பதிவு செய்த பொறுப்பு முயற்சிகளுக்கு வரி விலக்களிப்பு காலம் முடிவடைந்ததன் பின்னர் வரியினை ஏற்பாடு செய்யும்.

வாசகம் 18 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஏற்றுமதிகளாக கருதப்படுபவற்றின் வரி விதத்தினை பன்னிரண்டு சதவீதமாக குறைப்பதாக அமையும்.

வாசகம் 19: இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 56அ, 56ஆ, 56இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் அப்புதிய பிரிவுகள் அப்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மூலங்களிலிருந்தான வருமானம் வரி நோக்கங்களுக்காக ஏற்றுமதியாக கருதப்படும் வகையில் ஏற்பாடு செய்கின்றன.

வாசகம் 20 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பத்து சதவீத வரி சலுகை நோக்கத்திற்காக வருடாந்தப் புரள்வினை அதிகரிப்பதாக அமையும்.

வாசகம் 21 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஈ மற்றும் 59உ புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன் அப்புதிய உபபிரிவுகள் வருமான வரியினை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் தமது பங்குகளை பட்டியலிட்ட பொது மக்களுக்கு இருபது சதவீதத்திற்கு குறையாத பங்குகளை வழங்கிய கம்பனிகளினால் செலுத்தப்படும் வரியினை ஐம்பது சதவீதத்தினால் குறைப்பதற்கு ஏற்பாடு செய்வதுடன் மாற்று மின்வலு உற்பத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் சலுகை வருமானவரி வீதத்திற்கும் ஏற்பாடு செய்கின்றது.

வாசகம் 22 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவினை திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது வரி நோக்கங்களுக்காக பாரம்பரியம் அற்ற பண்டங்களாக மொத்த உயிரியற் தேயிலையினை வகுப்பாக்கம் செய்வதாக அமைகின்றது.

வாசகம் 23 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஒரு மில்லியன் ரூபாவிற்கு பங்குடமையொன்றின் பிரிபடற்பாலதான இலாபங்களுடன் திரட்டிய ஏனைய வருமானத்தன் வரையறையினை அதிகரிப்பதாக அமையும்.

வாசகம் 24 : இவ்வாசகமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் 79ஆம் பிரிவினைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் (3)ஆம் உப பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்டவாறு இலங்கையிலிருந்து அவரது பிரசன்னம் இல்லாது என்ற வகையில் தனியாள் ஒருவர் அவரது வதிவினை நீக்குவதற்கு முடியுமாக அமையும்.

ச.வ.ஓ–13/2013

2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. (1) இச்சட்டம் 2013ஆம் ஆண்டின் .. ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் -

(அ) (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16இ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள்;

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவுக்கு இச்சட்டத்தின் 8ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள்; அத்துடன்

(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவிற்கு இச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவால் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண் டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 7ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) உட்பந்தி (lxii) இல் "சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்; அத்துடன்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) உட்பந்தி (lxiii) என்பதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நிதியம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட நிதியம்;" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) உட்பந்தி (lxiii) என்பதை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(lxiv) 1974ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க, இலங்கைப் பொது மருத்துவத் தொழில் புரியுநர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொது மருத்துவர் தொழில் புரியுநர் கழகம்;

"(lxv) 1996ஆம் ஆண்டின் 17ஆம்இலக்க, இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை;

"(lxvi) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் ஊடாக ஒழுங்குசெய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து அல்லது பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட நிதியத்திலிருந்து கட்டணமின்றி

ஏற்பாடு செய்யப்பட்ட சேவைகளின் அளவுக்கு ஏதேனும் பகிரங்கக் கூட்டுத் தாபனம்;

"(lxvii) தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் (N D T F) ஒன்றிணைக்கப்பட்ட 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி;

"(lxviii) 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி; அத்துடன்

"(lxix) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக் கப்பட்டதும் அல்லாததான கல்வி அமைச்சுடன் பதிவு செய்யப்பட்டதும் மற்றும் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அரசாங்கப் பாடவிதா னத்தையும்அத்தகைய அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளையும் பின்பற்றுவதற்குப் பணிப்பாணை பெற் றுள்ளதுமான அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஈஈ) ஏதேனும் பொறுப்பு முயற்சியால் அப் பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்கென

எந்தப் பொறுப்பு முயற்சியுடன், விடயத்திற் கேற்ப 17அ அல்லது 16ஈ என்னும் பிரிவின் கீழ் அதன் வரி விடுமுறைக் காலப்பகுதியின் போது 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதும் மற்றும்நேரடி வெளிநாட்டு முதலீடாக 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான முதலீட்டைச் செய்துள்ளதுமான ஒரு பொறுப்பு முயற்சி யாகவுள்ள பொறுப்பு முயற்சியால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு இலங்கை யில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள நிபுணர் ஒருவராகவிருக்கும் தனியாளொருவருக்கு இலங்கையில் எழுகின்ற வேதனாதி கள்,இலங்கைப் பிரசையொருவர் அல்லாத வரான இலங்கையில் அவரால் ஆற்றப்படும் சேவை அத்தியாவசியமானது எனவும் அத்தகைய சேவையை இலங்கையில் பெற முடியாதுள்ளது எனவும் இலங்கை முதலீட்டுச் சபையால் உறுதிப்படுத்தப்படின்;

ஆயினும் இந்த ஏற்பாடு பொறுப்பு முயற்சியிலுள்ள எந்த நிபுணர்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த நிபுணர்களின் எண்ணிக்கை ஐந்தினை விஞ்சுதலாகாது.

இப்பந்தியின் நோக்கத்திற்கு ‘‘நிபுணர்’’ என்பது இலங்கைப் பிரசைகளிடையே எந்தத்துறையில் போதிய நிபுணத்துவம் கிடைக்கவில்லையோ அந்தத் துறையாக இருக்கின்றதென இலங்கை முதலீட்டுச் சபை யால் செய்யப்பட்ட விதப்புரையின் மீது ஆணையாளார் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்படக்கூறான அத்தகைய துறை யில் நிபுணத்துவம் கொண்ட தனியாளொருவர் எனப் பொருள்படும்;’’;

(2) பந்தி (4) என்பதில், ''ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து; அப்போது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''2013 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுமிடத்து, அப்போது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) பந்தி (ப) என்பதில் ''(1)ஆம் உட்பிரிவின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''2013 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (1)ஆம் உட்பிரிவின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) பந்தி (ய) என்னும் பந்தியில் ''ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்.''. என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''2013, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்.''. என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அப்பிரவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(அஅ) இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையத்தின் அல்லது முறியில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலிருந்து செய்யப்பட்ட முதலீட்டிலிருந்து 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்காண்மைக்கு அல்லது வேறு ஆட்களின் குழுமத்திற்குத் திரளும் வட்டி'';

(2) அப்பிரிவின் (ங) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேரப்பதன்மூலமும்:-

"(ச) 2013 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர்-

(i) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் விலை கோரப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்பு தனிசுப் பிணையத்தில்;

(ii) நிதியமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்ட ஏதேனும் மாநகர சபையால் ஏதேனும் மாநகர முறியில்,

செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து எவரேனும் ஆளுக்குத் திரளுகின்ற அல்லது எழுகின்ற வட்டி அல்லது தள்ளுபடி.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஆஆஆ) பண்டங்களை ஒரு நாட்டிலிருந்து பெற்று இலங்கையைத் தவிர வேறோர் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் ஏதேனும் தொழில் தொடர்பில் 2012, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளினால் வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும்;";

(2) அப்பிரவின் (ஈஈஈஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(ஈஈஈஈஈ) இலங்கைப் பிரசையொருவரான எவரேனும் வதிவுள்ள தனியாளினால் வெளியே வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்ட இலாபங்களும் வருமானமும், அத்தகைய இலாபங்களும் வருமானமும் (நியாயமான செலவினங்களாக இருக்கக் கூடியதான ஆணையாளர் தலைமையதிபதியால் கருதப்பட்டவாறு இலங்கைக்கு வெளியில் செலவிடப்பட்ட அத்தகைய தொகை எதுவுமிருப்பின் அதனைக் கழித்து) வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படின்;”;

(3) அப்பிரிவின் (ரரரரரர) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(ரரரரரரர) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்,

(iii) பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையில் விலைகோரிப் பெறப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்பு தனிசுப் பிணையத்தில்;

(iv) நிதியமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் மாநகர சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் மாநகர முறியில்;”;

செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம்;”;

(4) அப்பிரிவின் (வவவவவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(வவவவவவவ) இலங்கைக்கு வெளியே திரட்டப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டிலிருந்து இலங்கையில் செய்யப்பட்ட முதலீடு 50 மில்லியன் அமெரிக்க டொலரை விஞ்சுமிடத்தும் அத்துடன் அத்தகைய சேவைகள் இலங்கையில் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தியாவசியமானவை எனவும் இலங்கையில் பெற முடியாது எனவும் முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியால் கருதப்படுமாயின் பிரிவு 17அ மற்றும் 16ஈ என்னும் பிரிவின் கீழ் வரி விடுமுறைக் காலப்பகுதியின்போது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்றிடமிருந்து ஏதேனும் வெளிநாட்டு கூட்டிணைப்பாளருடன் பெறப்பட்ட வடிவமைப்பிற்கான ஏதேனும் புனைவுரிமைத், தொகை உரிமை அல்லது ஏதேனும் கொடுப்பனவு;”;

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு “வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்” -

(i) அத்தகைய தனியாளொருவர் இலங்கை மற்றும் வேறு ஏதேனும் நாடு ஆகிய இரண்டினதும் பிரசையாக விருக்குமிடத்து, 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக;

(ii) அத்தகைய தனியாள் வேறு ஏதேனும் நாட்டின் பிரசையாகவிருக்குமிடத்து 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக; அத்துடன்

(அ) இலங்கை பிரசை; அல்லது

(ஆ) அத்தகைய வேறு நாட்டின் பிரசாவுரிமை அளிக்கப்பட்டதன் பின்னர் இலங்கைப் பிரசாவுரிமையை அவர் இழந்துள்ளார் என்ற நிகழ்வின் மீதடிப்படையில் இலங்கையில் நிரந்தர விதிவிட அந்தஸ்தைப் பெற்றுள் ளார்,என்னுமிடத்து வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றார் -

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16இ என்னும் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அட்டவணையின் I ஆம் நிரையில்'' உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு ஆனால் கமத்தொழில் தொடர்பான சேவைகள் உள்ளடக் கப்படாமல் (உற்பத்தியில் 50% வீதத்திற்கு மேல் உள்ளூர் சந்தையில் விற்கப்படவிருப்பின், உற்பத்திப் பொருட்கள் குறைந்த பட்சம் 35% சேர்பெறுதியுடன் இருத்தல் வேண்டும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும், உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு:

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்யுமிடத்து, அத்தகைய பொருளின் உற்பத்தியின் 50% வீதத்திற்கு மேல் உள்ளூர் சந்தையில் விற்கப்படவிருப்பின், அத்தகைய பொருள் குறைந்த பட்சம் 3% பெறுமதி சேர்க்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(i) (ஆ) என்னும் பந்தியில் "அந்தப் பொறுப்பு முயற்சியும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(அந்தப் பொறுப்பு முயற்சியும்;"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "தொடங்கும் பொறுப்பு முயற்சியும" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொடங்கும் பொறுப்பு முயற்சியும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(iii) அவ்வுட்பிரிவின்(இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈ) முன்னர் உள்ளதாகவிருக்கின்ற ஏதேனும் தொழிலின் பிரித்தலின் அல்லது மீள்நிர்மாணத்தின் அல் லது கொள்ளலின் மூலம் உரு வாக்கப்பட்டதாக இல்லாததும்;"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

8. 2012 ஆம் ஆண்டு 8ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஈ என்னும் பிரிவானது, "ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்தாண்டுகளைக் கொண்டவொருகாலப் பகுதிக்கு, அத்தகைய பொறுப்பு முயற்சியானது முன்னதாக இருக்கின்றதான ஏதேனும் வியாபாரத்தின் பிரித்தலின், மீள் நிர்மாணத்தின் அல்லது கொள்ளுதலில்" மூலம் உருவாக்கப்பட்டதாக இல்லாததாகவிருப்பின், விலக்களிக்கப் படுதல் வேண்டும். இப்பிரிவின் நோக்கங்களுக்காக "முதலீட்டுத் தொகை" என்பது ஏதேனும் காணியின் பொறித்தொகுதியின், இயந்திரத் தொகுதியின் உபகரணத்தின் அல்லது வேறு நிலையான சொத்துக்களின் ஆகுசெலவு எனப் பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 உ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 உ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்து வதுடன் அச்சட்டவாக்கத்தின் 16 உ என்னும் பிரிவாகப் பயனுறு தலும் வேண்டும்:-

உரத்தின் உற்பத்தி விநியோகம் சந்தைப் படுத்துதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏதேனும் மீளப்புதுப்பிக்கப் படற்பாலதான மாற்றங்கள் என்பவற்றி லிருந்தான இலாபங்களை வருமானமும் விலக்களித்தல்.

16உ. எவரேனுமாளின் அல்லது பங்காண்மை யின் 3ஆம் பிரிவின் (அ)என்னும் பந்தியின் கருத்துக்குட்பட்ட இலாபங்களும் வருமானமும் (ஏதேனும்: மூலதனச் சொத்தின் கையுதிர்த்தலி லிருந்தான ஏதேனும் இலாபங்களும் வருமானமும் தவிர வருமான வரியிலிருந்து விலக்களிப்புச் செய்தல் வேண்டும்.

(i) பத்து ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் ஏதேனும் மீளப்புதுபிக்கப் படற் வலுவூட்டும் பயிர்களை பயிர்செய்த லின் ஏதேனும் பொறுப்பு முயற்சியி லிருந்து;

(ii) 2013, ஏப்பிறல் I ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற சேதனப்பசளைகள் மற்றும் பீடைகொல் லிகள் உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தலுடன் தொடர்புபட்ட எல்லா கொடுக்கல் வாங்கல்கள்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ எனினும் பிரிவிவைத் திருத்துதல்.

10. (1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (ii)என்னும் உப பந்தியில் ''தைத்த ஆடைகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தைத்த ஆடைகள் மற்றும் துணைகள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (XXVii) என்னும் உபபந்தியில்:தேசிய பொருளாதார'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் தேசிய பொருளாதாரம் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; (அத்துடன் என்பதனை நீக்கிவிடுவதன் மூலம்)

(3) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில ''ஏதேனும் பொறுப்பு முயற்சி'' எனப் பொருள்படும்; ''என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"ஏதேனும் பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும் அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்-

(4) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும:-

"(இ) நிலையாகவுள்ள ஏதேனும் தொழிலின் அல்லது மீள்நிர்மாணத்தினால் அல்லது கொள்ளலின் மூலம் உருவாக்கப்படாத.

இப்பிரிவின் நோக்கத்திற்காக, "முதலீட்டுத் தொகை என்பது ஏனேும் காணியின் பொறியின், பொறித் தொகுதியின், உபகரணத்தின் மற்றும் வேறு நிலையான சொத்துக்களின் செலவு எனப்பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. 2012 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க , சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின்(இ) என்னும் பந்தியில், "கொள்ளப்படு மிடத்து, வீதமானது கொள்ளலின் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

ஆயின், 2013, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்படுமிடத்து அத்தகைய உயர் தொழில்னுட்ப பொறி , பொறித் தொகுதி அல்லது உபகரணம் மாற்று சக்தி வளங்களிலிருந்தான ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது தொழிலின் மின் பிறப்பாக்கத்தின் மொத்தத் தேவைப்பாடான முப்பது சதவீதத்திற்கு மேல் பெறும் ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது தொழிலில் பயன்படுத்தப்படும்.

"மாற்று வலுவளங்கள் என்பது மின்சாரத்ததைப் பிறப்பிக்கும் தேசிய தவிர்ந்த ஏதேனும் வளங்கள் எனப் பொருள்படும்;

(2) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்த்தல் மூலம்:-

(உ) தொழில்நுட்ப தரஉயர்வு நோக்கத்துக்கு அல்லது ஏதேனும் புதிய தொழினுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு 2013, ஏப்பிறல் ஐஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் தொழலில் கொள்ளப்படுவதும் பயன்படுத்தப் படுமிடத்து வீதமானது கொள்ளவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(ஊ) முகாமைத்துவ முறைமை தொடர்பில், பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டிய தகவல் தொழினுட்ப உட்கட்டமைப்பின் தரம் உயர்த்தலுக்காக ஏதேனும் பங்குதரகர் கம்பெனியில் ஏதேனும் பொறி, பொறித்தொகுதி அல்லது உபகரணம் 2013, ஏப்பிறல் I ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டும் பயன் படுத்தப்படுமிடத்து வீதமானது கொள்ளவின் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(எ) ஏற்றுமதியிலிருந்து அத்தகைய வர்த்தகத்தின் அல்லது தொழிலின் மொத்த விற்பனை வரவு வரியின் ஆகக்குறைந்தது 60 சதவீதமாக இருக்குமிடத்து ஏதேனும் வர்த்தகத்தில் அல்லது தொழிலில் ஏதேனும் பொறி, பொறித் தொகுதி அல்லது உபகரணம் 2013, ஏப் I ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டும் பயன்படுத்தப் படுமிடத்து , வீதமானது கொள்ளளவின் செலவின் ஐம்பது சதவீதமாதல் வேண்டும்;

(3) அவ்வுட்பிரிவின் (i)ஆம் பந்தியின் ,

ஆயின், 2012, ஏப்பிறல் I ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கான கழிப்பனவு, அத்தகைய ஆளினால் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் 300 சதவீதத் துக்கு சமமான தொகையொன்றாதல் வேண்டும்.

(அ) அத்தகைய ஆராய்ச்சி,ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட 2012 ஏப்பிறல் ஐஆம் தேதியன்ற அல்லது அதன் பின்னர் ஆனால் 2013 ஏப்பிறல் I ஆம் தேதிக்கு முன்னர் உறப்பட்ட அத்தகைய செலவினத்தை;

(ஆ) அத்தகைய ஆராய்ச்சி, ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் ஊடாக 2013 ஏப்பிறல் I தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட அத்தகைய செலவினமாக இருக்கு மிடத்து அத்தகைய ஆளினால் உறப்பட்ட அத்தகைய செலவினத்தின் முந்நூறு சதவீதத் திற்குச் சமமான தொகையொன்றாதல் வேண் டும்;

(4) அப்பிரிவின் (ந)என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை சேர்ப்பதன் மூலம்:-

(ப) அரசாங்கத்துக்கு விசேட அறவீடொன்றாக பகிரங்க கூட்டுத்தாபனமொன்றில் அல்லது அரச சொந்த வியாபாரப் பொறுப்பு முயற்சி யினால் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை''

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதனமைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (4) என்னும் பந்தியில் : தவிர ''ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் கொண்டு...................... என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''விளையாட்டுகள் என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு

குறித்தளிக்கப்பட்டதோ அவ்வமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளின் அனுசரணையின் மீது 2012 ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் உறப்பட்ட இலங்கைக்கு வெளியேயான விளம்பரச் செலவு தவிர, ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளினால் கொண்டு நடத்திடும் அல்லது பிரயோகிக்கும் ஏதேனும் வர்த்தகம், வியாபாரம், உயர்தொழில் அல்லது வாழ்க்கை தொழில் சம்பந்தமாக அவரின் விளம்பரச் செலவினது ஓரரைவாசி; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

13. 2012 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, சட்டத்தில் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதனமைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படு கின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவினை திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(ப) 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு இலாபங்கள் தவிர்ந்த இலங்கையில் வதிவிடவுள்ள எவரேனும் தனியாளின் தொழிலில் இருந்து இலாபங்களானவை 2013, ஏப்றல் 1 ஆந் தேதியன்று அதன் பின்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கான ஐந்நூறாயிரம் ரூபாவை விஞ்சும்போது,

(i) ஐந்நூறாயிரம் ரூபா ;

(ii) இவற்றுள் எந்தத்தொகை குறைவானதோ அந்த தொகையாகும்;

''(ம) இலங்கைப் பிரசையல்லாத ஒருவரும் இலங்கையில் வதிவிடமல்லாத வருமான எவரேனும் தனியாளுக்கு இலங்கையானது எழுகின்ற 2013,

ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டினை உத்தியோகபூர்வ வேதனாதிகளின் அத்தகைய பாகம் ஒரு நூறாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது;'' அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் அப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i)ஆம் உட்பந்தியில் ''

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவினை திருத்துதல்.

14. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதனமைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவில், ''20 சதவீதத்தை'' என்னும் சொற்கள் அப்பிரிவில் எங்கு காணப்பட்டாலும் அதற்குப் பதிலாக, ''பதினாறு சதவீதத்தை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவினை திருத்துதல்.

15. 2009ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதனமைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவில், ''இருபது சதவீதத்தை'' என்னும் சொற்கள் அப்பிரிவில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அதற்குப் பதிலாக அங்கெல்லாம், ''பதினாறு சதவீதத்தை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

16. முதனமைச் சட்டவாக்கத்தில் 46ஆம் பிரிவின் உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அந்த சட்டவாக்கத்தின் 46அ பிரிவாகப் பயன்வலுப் பெறுதலும் வேண்டும்.

''கோழிப் பண்ணைகளின் இலாபம் மீதான வருமான வரி வீதங்கள்.

46அ. பிரிவு 3இன் (அ) என்னும் பந்தியின் கருத்துக்குட்பட ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானம் வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளின் வரிவிதிக்கத்தக்க வருமானம் (ஏதேனும் மூலதனச் சொத்தினைக் கையுதிர்ப்பதிலிருந்து பெறும் ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் தவிர) கோழிப் பண்ணையிலிருந்து,

அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானத்தினை உள்ளடக்கிய வகையில் அத்தகைய வரிவிதி வருமானத்தின் அத்தகைய பகுதி, ஏனைய ஏற்பாடுகளுக்கு முரணானதாக எதுஎவ்வாறாறிருப்பினும் இச்சட்டத்திற் ஐந்தாவது அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரியுடன் அறிவிடப்படும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''கோழிப் பண்ணையிலிருந்த இலாபங்கள் மற்றும் வருமானம்'' என்பது அத்தகைய ஆளினால் ஏதேனும் உற்பத்தி அல்லது தயாரிப்புச் செயன்முறைக்குட்படாத வகையில் செய்யப்படும் உற்பத்தி விற்பனையி லிருந்து பெறப்படும் அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் எனப் பொருள்படும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48இ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ பிரிவின் உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அச்சட்டவாக்கத்தின் 48இ என்னும் பிரிவாகப் பயன்வலுப் பெறுதலும் வேண்டும்.

''முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப் பட்ட பொறுப்பு முயற்சிகள் வரி விலக்களிப்பு காலம் முடிவடைந்த துடன் ஏற்புடையதான வருமான வரி வீதம்.

46இ. 1978 ஆம் அண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஏதேனும் பொறுப்பு முயற்சிகளுக்கு வரிச்சலுகைகள் ஏற்பாடு செய்யப்படுவதுடன்

(அ) அதன் கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட வரி விலக்களிப்பு காலம் முடிவடைந்தன் பின்னர் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் வரிவிதிப்பனவானது, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான வரிவிதிப்பனவினைவிட சுமையாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வருமான வரிச் சலுகைகள் குறைநிரப்பு உடன்படிக்கை களின் மூலம் நீடிக்கப்படாத சந்தர்ப் பத்தில்,அத்தகைய பொறுப்பு முயற்சி களின் இலாபங்கள் மற்றும் வருமானத் தின் அத்தகைய பாகம், இச்சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.''

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவினைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 56ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உபபிரிவில், ''பதினைந்து சதவீதப்படி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பண்ணிரெண்டு சதவீதப்படி'' என்னும் சொற்களை பதிலீடு செய்தல்.

(2) அப்பிரிவின் (3)ஆம் உபபிரிவில், ''பதினைந்து சத வீதத்தை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, அவ்வுட் பிரிவில் அத்தகைய சொற்கள் காணப்படும் இடங்க ளிலெல்லாம், ''பண்ணிரெண்டு சதவீதத்தை'' என்னும் சொற்களைப் பதிலீடு செய்தல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ, 56இ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தில் 56ஆம் பிரிவினை உடனடுத்த பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அந்த சட்டவாக்கத்தின் 56அ, 56ஆ மற்றும் 56இ பிரிவுகளாகப் பயன்வலுப் பெறுதலும் வேண்டும்.

''ஏற்றுமதிக் கம்பனி யொன்றினால் பண்டங்கள் விற்பனை யிலிருந்து இலாபங்கள், வருமானம் மீதான வருமான வரி வீதம்.

56அ. 1978ஆம் அண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஏற்றுமதிக் கம்பனியொன்றின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பகுதி 2013 ஏப்பிறல் 1ஆம் திகதி அல்லது பின்னர் ஆரம்பமாகும்

ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, இறக்குமதி மாற்றீடு என்றவகையில் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுவரை-

(அ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்ட 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டச் சட்டத்தின்கீழ் அல்லது இந்த சட்டத்தின் 16இ, 16ஈ அல்லது 17அ பிரிவுகளின்கீழ் வரி விடுமுறையினை அனுபவிக்கும் ஏதேனும் கம்பனி, கருத்திட்ட செயற்படுத்துகையின் பொது அத்தகைய உடன்படிக்கையின் ஏற்பாடுகளின்கீழ் தீர்வை அற்ற அடிப்படையில் கருத்திட்டம் தொடர்புடைய பண்டங்கள் அல்லது மூலப் பொருட்கள் இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது; அல்லது

(ஆ) ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின்கீழ் தீர்வையற்ற அடிப்படையில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு தகைமைபெறும் எவரேனும் ஆள்,

இச்சட்டத்தின் ஏனைய ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எதுஎவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான வீதத்தில் ஏற்றுமதியிலிருந்த வருமானமொன்றின் இலாபமாகக் கருதப்படுவதுடன் வருமானவரியுடன் அறவிடப்படும்".

"வெளிநாட்டு கப்பல்களுக்கு பண்டங்கள் அல்லது சேவைகளின்

56ஆ. வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக வெளிநாட்டு கப்பல்களுக்கு இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகளின் ஏற்பாட்டினை வழங்குவதிலிருந்து

வழங்களிலிருந்து இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரிவீதம்.

2013 ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குபின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக, எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகமாக, இச்சட்டத்தின் ஏனைய ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எதுஎவ்வாறிருப்பீனும் ஏற்றுமதியிலிருந்து வருமானத்தின் இலாபங்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட தோதான வீதத்தில் வருமான வரி அறிவிடப்படுதல் வேண்டும்.".

வெளிநாட்டு நாணயத்தில் கொடுபனவுக்காக இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்தான இலாபங்களினதும் வருமானத்தினதும் மீதான வருமான வரி வீதம்.

56இ. இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்கிலிருந்து ஈட்டப்பட்ட வெளிநாட்டு பரிவர்த்தனையின் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்காக இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருளின் விற்பனையிலிருந்து 2013, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனுமாளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும் அதற்கு முரணாகாத வகையில் இச் சட்டத்தில் ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமான வரியுடன் அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

20.

முதன்மைச் சட்டவாக்கதின் 104ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஈ மற்றும் 59உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59இ பிரிவின் உடனடுத்து பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அச்சட்டவாக்கத்தின் முறையே 59ஈ மற்றும் 59உ பிரிவுகளாகப் பயன் வலுப்பெறுதல் வேண்டும்:-

"கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டிய லிடப்பட்டதும் பொது மக்களுக்கு பங்குகள் வழங்கியதுமான கம்பெனிக்கு ஏற்புடையதான வருமான வரிவீதம்.

59ஈ. (1) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் உரிமமளிக்கப்பட்டதும் பொது மக்களுக்கு அதன் பங்கில் அருபது சதவீதத்தினை விட குறையாத தொடக்க பகிரங்க முனைவு மூலம் வழங்கப்பட்டதும் 2013 ஏப்ரல் 1ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 2014 ஏப்ரல் 1ஆம் திகதிக்கு முன்னர் தனது பங்குகளை பட்டியலிட்ட ஏதேனும் கம்பெனியின், 3ஆம் பிரிவின் (அ) பந்தியின் கருத்துக்கமைவாக (ஏதேனும் மூலதனச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து) ஏதேனும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் தவிர) இலாபங்கள் மற்றும் வருமானம் மீது ஏற்புடையதான வரிவீதம், அத்தகைய கம்பனி பட்டியலிடப்பட்டதன் பின்னர் பொது மக்களினால் அதன் பங்குகள் இருபது வீதத்திற்கு குறையாமல் தொடர்ந்தும் பேணப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனையுடன் வரிமதிப்பீட்டு வருடத்திளை உடனடுத்துறும் மேலும் இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்காகவும் அத்தகைய பங்குகள் பட்டியலிடப்பட்ட வரிமதிப்பீட்டாண்டுக்காகவும் ஐந்து சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(2) உபபிரிவு (1)இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பனி அதன் பங்குகளை பட்டியலிட்டதன் பின்னர்வரும் அடுத்துப்பின்னரான ஏதேனும் வருடத்தில் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தில் பொதுமக்களினால் வைத்துக் கொள்ளப்பட்ட பங்குகளில் இருபது சதவீதத்திற்குக் குறையாத போது, உப பிரிவு (1) இன் கீழ் குறைக்கப்பட்ட வரியானது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் மீள்-மதிப்பீடுதல், கொடுப்பனவு செய்தல் மற்றும் அறவிடப்படுதல் வேண்டும்.

அப்பிரிவின் நோக்கங்களுக்காக பட்டியலிடப் பட்ட கம்பனியொன்று தொடர்பில், "பொதுமக்களால் வைத்துக்கொள்ளப்பட்ட பங்குகள்" என்பது-

(அ) அதன் தாய், துணை அல்லது இணைந்த கம்பனிகள் அல்லது ஏதேனும் துணை அல்லது அதன் தாய்க்கம்பனியுடன் இணைந்தவை;

(ஆ) அத்தகைய கம்பனியின் பணிப்பாளர் களாக பதவி வகிக்கும் அதன் பணிப் பாளர்கள், அவர்களது வாழ்க்கைத் துணை மற்றும் 18 வயதைவிடக் குறைந்த பிள்ளைகள்;

(இ) அதன் பிரதான நிறைவேற்று அலுவலர், அவரது வாழ்கைத்துணை மற்றும் 18 வயதை விடக் குறைந்த பிள்ளைகள்; அத்துடன்

(ஈ) அத்தகைய கம்பனியின் 10மூ அல்லது அதற்கு அதிகமானவற்றினை வைத்திருக் கும் எவரேனும் தனி பங்குடைமையாளர் நேரடியாக அல்லது நேரடியல்லாது எவரேனும் ஆளினால் வைத்திருக்கும் அத்தகைய கம்பனிகளின் பங்குகள் எனப் பொருள்படும்.

தொழிற்படும் ஏதேனும் மாற்று சக்தி உற்பத்தி கருத்திட்டத் திலிருந்து இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீதான வருமான வரி வீதம்.

59உ. ஏதேனும் சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் உள்ளடங்களாக ஏதேனும் மாற்று சக்தி உற்பத்திக்கான தொழிற்படும் ஏதேனும் கருத்திட்டத்திலிருந்து எவரேனும் ஆள் அல்லது பங்குடமையின் இலாபங்கள் மற்றும் வருமானத் தின் அத்தகைய பாகமானது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான வீதத்தில் வரி விதிப்பனவு செய்யப்படுதல் வேண் டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "சிறிய நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்" என்பது பத்து மெகா வோட்ஸூக்கு குறைவான மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் ஏதேனும் நீர் மின் கருத்திட்டம் எனப் பொருள்படும்".

முதன்மைச் சட்டவாக்கதின் 60ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. 2009ஆம் ஆண்டின் 19ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, சட்டத்தில் கடைசியாகத் திரத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 60ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் (ii) என்னும் உட்பிரிவில், "தொகையான கருந்தேயிலை, கிறேப் றப்பர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு கிலோ கிராமுக்கு மேற்பட்ட எடையினையுடைய சிப்பங்களின் அல்லது பொதிகளின் வடிவில் இல்லாததுத் ஒவ்வொரு சிப்பமும் அல்லது பொதியும் கருந்தேயிலை, கிறேப் இறப்பர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) "16 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விளைபொருட்கள் எனப் பொருள்படும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆனால், தொகையான தேயிலை உள்ளடங்கலான 16 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு ஏதேனும் விளைபொருட்கள் எனப் பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் என்னும் பிரிவைத் திருத்துதல்.

23. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கதின் 78 ஆம் பிரிவு (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வேறு வருமானத் தினதும் கூட்டுமொத்தத்தின் மீதும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டு மொத்தத்தின் மீதும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(ஆ) 2007, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கு, 76ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பால தான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டு மொதத்தின் ஆறு இலட்சம் ரூபாவுக்குக் கூடிய மிகை எதுவுமிருப்பின் அத்தகைய மிகையின் மீதும்; அத்துடன்

(இ) 2013, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு 76ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிபடற்பால தான இலாபங்களினதும் அத்துடன் வேறு வருமானத்தினதும் கூட்டு மொத்தத்தின் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் கூடிய மிகை எதுவுமிருப்பின், அத்தகைய மிகையின் மீதும்";

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் என்னும் பிரிவைத் திருத்துதல்.

24. 2008ஆம் ஆண்டில் 9ஆம் இலக்க சட்டத்தின் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவை இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அத்தகைய இல்லாமை ஆரம்பிக்கின்ற மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக 2013, ஏப்பிறல் 1 அந் தேதிக்கு முன்னர் வரிமதிப்பீட்டாண்டொன்றாக வருகின்ற அத்தகைய இல்லாமை ஆரம்பிக்கின்ற வரிமதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில், "கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2013, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் வரி

மதிப்பீட்டாண்டொன்றுக்காக கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கதின் 104ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. 2008ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 104ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், ''இரண்டு இணைப் பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலிலிருநந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் தேற்கொள்ளப்படும் ஏதேனும் சர்வதேசக் கொடுக்கல் வாங்கலிலிருந்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின (2) ஆம் உட்பிரிவில், ''ஆணையாளர் தலைமையதிபதி'' என்னும் சொல் அப்பிரிவில் எங்கெல்லாம் இடம்பெறுகின்றதோ அதற்குப் பதிலாக அங்கெல்லாம் ''மதிப்பீட்டாளர்'' என்னும் சொல்லை இடுவதன் மூலம்.

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பகுதியை உட்புகுத்துவதன் மூலம்:-

''(3அ) விதித்துரைக்கப்பட்ட முறையொன்றின் அடிப்படையின் மீது இப்பிரிவின் நோக்கங்களுக்காக கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் எவரேனுமாள் மற்றும் ஆணையாளர் தலைமையதிபதி என்பவர்களுக்கிடையில் முற்பண விலை உடன்படிக்கையொன்று செய்யப்படலாம்;

(4) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில்-

(அ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் .... என்னும் சொற்களுக்குப் பதிலாக,

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்திகளை சேகரிப்பதன் மூலம:-

''(இ) சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்'' என்பது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய இணைப்பு பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான ஏதேனும் பரஸ்பர உடன்படிக்கை அல்லது ஏற்பாட்டின் கீழ் கொள்வனவின் தன்மையில், பருப்பொருளான அல்லது பருப்பொருளற்ற ஆதனத்தின் விற்பனை அல்லது குத்தகை அல்லது சேவைகளின் ஏற்பாடு, அல்லது பணத்தைக் கடனாகப் பெறல் அல்லது அத்தகைய பொறுப்பு முயற்சிகளின் இலாபங்கள், வருமானம், நட்டம், அல்லது சொத்துக்கள் மீதான ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அத்துடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொறுப்பு முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படவுள்ள நன்மை, சேவை அல்லது வசதியுடன் தொடர்புடைய உறப்பட்ட அல்லது உறப்படவேண்டிய ஏதேனும் செலவுக்கு/செலவீனத்துக்கு ஏதேனும் பங்களிப்பு ஏதேனும் ஒதுக்கம் அல்லது பகுதி என்பவற்றை உள்ளடக்கியதுமான வதிவிடமற்ற ஒருவரோ அல்லது இருவராகவுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைப்பு பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலொன்று எனப் பொருள்படும்;

(ஈ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக இணைப்பு பொறுப்பு முயற்சி தவிர்ந்த, இருவரில் ஒருவர் வதிவிடமற்றவரான ஆளொருவருடன் பொறுப்பு முயற்சியொன்றினைச் செய்யும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் .... குறைப்பதற்கு அல்லது செலுத்தப்படவேண்டிய வரித்தொகையைக் குறைக்கும் பயனுடை விளைவுகளை யேற்படுத்துவதுடன் அத்தகைய பொறுப்பு முயற்சிக்கும் வேறு ஆளுக்கு மிடையில் உள்ள தீர்மானிக்கப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கலின் நியதிகள் மூலம் அத்தகைய பொறுப்பு முயற்சிகளுக்கும் வேறு ஆளுக்குமிடையில் முன்னர் உடன்படிக்கையொன்று இருப்பின் இரண்டு இணைப்பு பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் செய்யப்பட்ட சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்;

(உ) இப்பிரிவின் ஏற்பாட்டின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஏதேனும் செலுவுக்கான கட்டணம் அல்லது சர்வதேசக் கொடுக்கல்வாங்கல் ஒன்றிலிருந்து எழுகின்ற வட்டி என்பன கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(5) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பில், “இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களில்” என்னும் சொற்க்ளுக்குப் பதிலாக, “இணைப் பொறுப்பு முயற்சிகளுக் கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில்” என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 104அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 104ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 104அ என்றவாறு பயனுறுதலும் வேண்டும்:-

இணைப் பொறுப்பு முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் இருந்துவரும் இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப் படுதல் வேண்டும்

104அ. (1) பிரிவு 104இன் உட்பிரிவு (1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் அல்லாத இரண்டு இணைப்பொறுப்பு முயற்சிகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேறு கெதடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற பெறப்படுகின்ற அல்லது திரளுகின்ற எவையேனும் இலாபங்களும் வருமானமும் அல்லது அதில் உறப்படுகின்ற ஏதேனும் நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை கருத்திற் கொண்டு ஆய்ந்தறிப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைகளுக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு ஆய்ந்தறியப்படவில்லை வரி மதிப்பீட்டாளருக்குத் தோன்றுமிடத்து அவர் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முகவரியிடப்பட்ட எழுத்தில், விடயத்திற்கேற்ப, அத்தகைய இலாபங்களும் வருமானமும் அல்லது அத்தகைய நட்டம் உண்மையில் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை கருத்திற்கொண்டு தான் ஆய்ந்தறியப்பட்டுள்ளது என்பதை வரி மதிப்பீட்டாளர் திருப்தியுறும் விதத்தில் எண்பிக்குமாறு அவரைத் தேவைப்படுத்தலாம், அத்தகைய ஆள் அவ்வாறு எண்பிக்கத் தவறுமிடத்து வரி மதிப்பீட்டாளர் விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களினதும் வருமானத்திநதும் அல்லது நட்டத்தின் தொகையை மதிப்பீடு செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீட செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை அந்நோக்கத்திற்கென குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு

முறியின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்கு,-

(அ) பொறுப்பு முயற்சியொன்று (முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்பு முயற்சி) வேறொர் பொறுப்பு முய்றிசியின் (இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்பு முயற்சி) கட்டுப்பாட்டில் நேரடியாகவோ அல்லது ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர் ஊடாகவோ வித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு பங்குபற்றுமாயின் அது இணைப்பொறுப்பு முயற்சியொன்று எனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) “கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலைர என்பது இணைப்பொறுப்பு முயற்சிகள் அல்லாத ஆட்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கலொன்றில் கட்டுப்பாடற்ற நிபந்தனைகளின்போது பிரயோகிக்கப்படும் ஒரு விலை என்று பொருளாகும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சட்டத்தில் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 113ஆம் பிரிவு.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் அத்தகைய போது தொழில்தருநர் ஒருவர் அத்தகைய கம்பளக் காலப்பகுதிக் கான அத்தகைய ஊதியம் தொடர்பில் கழிக்கப்பட்ட தொகைக்கு கூடுதலான ஏதேனும் பணத்தொகையை ஏதேனும் சம்பளக் காலப்பகுதிக்காக எவரேனும் ஊழிய ரின் ஊதியத்திலிருந்து வருமான வரியை கழிக்குமிடத்து, அத்தகைய வரிமதிப்பீட்டாண்டில் அல்லது உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் சம்பளம் காலப் பகுதிக்காக அத்தகைய ஊழியரின் ஊதியம் தொடர்பில் கழிக்கப்பட்ட வருமான வரித் தொகைக்கு கூடுதலான ஏதே னும் தொகையை குறைக்கலாம் என்பதுடன் அத்தகைய சீராக்கத் தேதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கலாம்.

29. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 135ஆம் பிரிவு அதன் உட்பிரிவு (1)இல் அத்தகைய கூட்டிணைப்பு தனிசுப் பிணையம் வழங்கப்படும் நேரத்தில் செய்யப்படுதல் வேண்டும்", "அத்தகைய என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவினை திருத்துதல்.

"அத்தகைய கூட்டிணைப்பு தனிசுப் பிணையம் வழங்கப் படும் நேரத்தில் கழிக்கப்படுதல் வேண்டும் ஆயின் -

(அ) அத்தகைய கூட்டிணைப்பு தனிசுப் பிணைய மானது மீளாய்வுக் காலப்பகுதிகளுக்காக மிதப்பு வட்டி வீதத்துடன் வழங்கப்படுமிடத்து, அத்த கைய கழிப்பானது வட்டிவீதத்தின் அத்தகைய ஒவ்வொரு மீளாய்வுக் காலப்பகுதியில் தொடங்கு கின்ற நேரத்தில் கழிக்கப்படுதல் வேண்டும்"

(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்குப் பின்னர் வழங்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைப்பு தனிசுப் பிணையத்துக்கு கொடுபடற்பாலதான வட்டி

யானது 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்குப் பின்னர் கொடுபடற்பாலதானதாக விருக்கின்றவிடத்து மற்றும் அது தொடர்பில் வட்டி மீதான வருமான வரிக் கழிப்பனவு எதுவும் செய்யப்படுதல்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 140ஆம் பிரிவினை திருத்துதல்.

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணை ஒன்றின் வழங்குகின்ற வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பனி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் கீழ் வருமான வரியின் அறவிடப்படக்கூடிய எவரேனுமாளுக்கு ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட வட்டியிலிருந்து வருமான வரியைக் கழிப்பதற்கு அல்லது வைப்பிலிடுவதற்கு அல்லது கழிவை அனுமதிப்பதற்கு தேவைப் படுத்தப்படுத்துமிடத்து விடயத்திற்கேற்ப ஒவ்வொரு மீளாய்வு காலத்தின் ஆரம்பத்தில் அத்தகைய கொடுப்பனவு தொடர்பில் அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பெனிக்கும் அத்தகைய ஆளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கைக்கிணங்க அத்தகைய ஆளுக்கு அத்தகைய வட்டி செலுத்தப்பட்ட நேரத்தின்போது அத்தகைய வருமான வரி அல்லது அத்தகைய பிணையம் வழங்கப் பட்டபோது அல்லது மாறுகின்ற வட்டி வீதத்துடன் வழங்கப்படும் அத்தகைய கூட்டிணைப்பு கடன் பிணையம் உள்ளவிடத்து விடயத்திற்கேற்ப கழிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(2) அப்பிரிவின் சுருக்கப்பெயரில், "வருமான வரி கழிப்பனவைத் தொடர்ந்து வங்கிகளினதும் நிதிநிறுவனங்களினதும் கடமைகள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வருமான வரி கழிப்பனவைத் தொடர்ந்து வங்கிகளினதும், நிதி நிறுவனங்களினதும் மற்றும் கம்பெனிகளினதும் கடமைகள்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவினை திருத்துதல்.

31. முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவு இலிருந்து வரையான சொற்களுக்குப் பதிலாக, "வட்டியை செலுத்தகின்ற அல்லது ஏதேனும் கடன் பிணையத்தை வழங்கும் ஏதேனும் வங்கி அல்லது நிதிநிறுவனம் அல்லது கூட்டிணைப்பு கடன் பிணையம் வழங்கும் ஒரு கம்பெனி விடயத்திற்கேற்ப, 133 ஆம் அல்லது 135ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க வரிக்கழிப்பினைச் செய்யாதவிடத்து, அவர் அத்தகைய வங்கிக்கு, நிதி நிறுவனத்திற்கு அல்லது வட்டி செலுத்துகின்ற அல்லது கடன் பிணையம் வழங்குகின்ற கூட்டிணைப்புக் கடன் பிணையம் வழங்குகின்ற அத்தகைய கம்பெனிக்கு விடயத்திற்கேற்ப, காரணத்தை காண்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் 133 ஆம் பிரிவு அல்லது 135 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் மீறுகையொன்று இடம்பெற்றுள்ளதென அவர் திருப்திப்படுமிடத்தும் விடயத்திற் கேற்றவாறான, தண்டப்பணமொன்றை வட்டி செலுத்துகின்ற, அத்தகைய கடன் பிணையத்தை வழங்குகின்ற அல்லது கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணையத்தை அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் அல்லது கம்பெனி மீது விதிக்கலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 142 ஆம் பிரிவினை திருத்துதல்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 142ஆம் பிரிவின், "வங்கி அல்லது நிதி நிறுவனம்" என்னும் சொற்கள் அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் எங்கெல்லாம் இடம்பெற்றுள்ளதோ அங்கெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, "வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கம்பெனி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவினை திருத்துதல்.

33. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 172ஆம் பிரிவை திருத்துதல்.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 172 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

1. அப்பிரிவின் 2ஆம் உட்பிரிவில், "மீளாய்வு சபைக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக, "2011, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் மீளாய்வு சபைக்கு அல்லது 2011,

ஏப்பிறல் 1 ஆம் திகதியில் அல்லது அதன் பின்னர்'' வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கு'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்;

2.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 204அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

35. 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 204அ என்னும் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இச்சட்டத்தின் அல்லது ஆணையாளல் தலைமையதிபதியின் நிருவகிக்கப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின் அல்லது அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின், விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், ''சட்டத்தின் ஏற்பாடுகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சட்டத்தின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 208அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 208அ என்னும் இப்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''குழுவானது பொருட்கோடலுக்கென அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகொளை, அத்தகைய வேண்டுகோளானது கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தீர்மானித்தல் வேண்டும்.''.

37. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான 217 ஆம் பிரிவானது “பங்கிலாபம்” என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தின் (அ) என்னும் பந்தியின் உபபந்தி (iv)இல் “இனத்தைச் சேர்ந்த பங்கிலாபம்; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.

“பங்கு இனத்தைச்சேர்ந்த பங்கிலாபம்; அல்லது

(v) கம்பனியொன்று அதன் பங்குதாரர்களிடமிருந்து பங்குகளை மீளவும் வாங்குமிடத்து, எவரேனும் பங்குதாரருக்கு, அத்தகைய கம்பெனியின் பங்குதாரர்கள் அத்தகைய பங்கு மீள வாங்குதலை கூட்டமொன்றில் அங்கீகரித்த தேதியிலுள்ளவாறான விடயத்திற்கேற்ப, அத்தகைய பங்கிற்கான விலைக்கோரிப் பெறப்பட்ட சந்தை விலையை அல்லது அத்தகைய பங்கின் சந்தைப் பெறுமதியை விடவும் மேலதிகமான கொடுப்பனவு, ஏதேனும் இருப்பின், அம்மேலதிகக் கொடுப்பனவு; அத்துடன்.

38. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் V இற்குப் பதிலாகப் பின்வரும் பாகத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

“பாகம் V

35 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தொகைக்கு ஏற்புடையத்தான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	பாகம் I, பாகம் I அ அல்லது பாகம் 1ஆ இன்படி, ஆனால் ஆகக்கூடியது 20 சதவீதத்திற்கமைவாக.
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	பாகம் I, பாகம் I ஆ இல் உள்ளவாறு, ஆகக்கூடியது 16 சதவீதத்திற்கமைவாக.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

39. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையானது, அவ்வட்டவணையின் பாகம் அ இன் 2ஆம் விடயத்தை உடனடுத்துப்பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"3. ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பு முகாமைக் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத் தின் மீது-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	பாகம் அ இன்படி.
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	10 சதவீதம்."

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.

40. 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஐந்தாம் அட்டவணையானது, இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டவணையின் 9ஆவது விடயத்தில், "பொறுப்பு முயற்சியிலிருந்தான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொறுப்பு முயற்சியிலிருந்தான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வட்டவணையின் 10ஆவது விடயத்தில், ".." என்னும் சொற்களுக்குப் பதிலாக, ".." என்னும் சொற்களை இடுவ தன் மூலமும்;

(3) அவ்வட்டவணையின் 22 ஆம் விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம்:-

"22. பிரிவு 58 இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமான வரி வீதம்-

(அ) 2011, ஏப்பிறல் 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	15 சதவீதம்.
(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	12 சதவீதம்.";

(4) அவ்வட்டவணையின் 23ஆம் விடயத்திற்குப் பதிலாக, பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"23. பிரிவு 58இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வருமான வரி வீதம்-

(அ) 2011, ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	15 சதவீதம்.
(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	12 சதவீதம்.”;

(பிரிவு 59)

(5) அவ்வட்டவணையின் 40 ஆம் விடயத்திற்குப் பதிலாக, உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

“41. பிரிவு 58அ இல் குறிப்பீடு செய்யப்பட்ட கோழிப் பண்ணைக்கான தொழிற் பொறுப்பு முயற்சியொன்றில் ஈடுப்பட்டுள்ள எவரேனும் ஆளின் இலாபங்களின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	15 சதவீதம்.
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு- ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 10 சதவீதத் திற்கமைவாக கம்பெனியொன்றிற்கு 10 சதவீதம்.	12 சதவீதம்.”;

"42. பிரிவு 56அ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	முதலாம் அட்டவணைப் படி
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	முதலாம் அட்டவணைப் படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக, கம்பெனி யொன்றிற்கு 12 சதவீதம்.

"43. பிரிவு 56ஆ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	முதலாம் அட்டவணைப் படி
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு-	முதலாம் அட்டவணைப் படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற் கமைவாக, கம்பெனி யொன்றிற்கு 12 சதவீதம்.

"44. பிரிவு 56இ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மாற்று மின் பிறப்பாக்கம் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதிலிருந்தான எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின்

அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	முதலாம் அட்டவணைப் படி
(ஆ) 2013, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு-	முதலாம் அட்டவணைப் படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சத வீதம்.

“45. பிரிவு 56உ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனும் ஆளின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்-

(அ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,	முதலாம் அட்டவணைப் படி
(ஆ) 2013, ஏப்பிறல் 1ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு-	முதலாம் அட்டவணைப் படி, ஆனால் தனியாள் ஒருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்திற்கமைவாக, கம்பெனியொன்றிற்கு 12 சத வீதம்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

41. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்